உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம், சந்சிகை ௮] ௲௮௱௪௰௨ ஹு சித்திரை ௨௧, தேயதி வியாழக்கிழமை, Thursday, April 21, 1842 [Vol. II No 8

பாண்டிவளநாட்டுச் சரித்திரக் குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

(Continued from page 73)

வமசசேகரனுடைய ராசாங்கத்திலே அந்நியதேச விவகாரங்கள் மதுரையை முற்றிக்கைபோட்டுக்கொண்ட விக்கிரம சோழராசா [illegible] சேனையோடேமுறிந்தன ஆனாலும் அந்தச் சோழன் சிவசகாயத்தினாலே ஓடிப்போய்விட்டான். இந்தப் பாண்டியனுடைய குமாரன் மிகவும் பாக்கியவானாயிருந்தான். இவன் தன்னிடத்திலே ஆசிருதர்களாயிருந்த புலவர்களிடத்திலே சங்களவத்தனத்தினாலே உண்டாகிய விரோதங்களிலே தவிர அதிகமாய வேறே விரோதங்களிலே பிரவேசித்திருந்தவனல்ல

வமசசூடாமணி காலமுதற்கொண்டு கூன்பாண்டியன் ராசாங்கம் வரைக்கும் காரியங்களைக் குறித்தாவது விவரிக்காமல் மறுபடியும் மத்தியிலே வெகு காலம் போய்விட்டது அப்படியிருந்தும் இரண்டொரு கதைகளிருக்கின்றன அவைகள் அவனைச் சார்ந்தவைகளென்றும் பின்னொருவனைச் சார்ந்தவைகளென்றும் பலவிதமாய்ச் சொல்லப்படுகின்றன. ஆகையினாலே வீணாய்ப் போன மத்தியகாலத்தைப் பூரிக்கிறதற்கு அவைகளை வைத்துக்கொள்ளலாம்

வமசசூடாமணி முதல் மூன்றாம் ராசாவானவன் குலேசனென்று சாதனங்களிலே சொல்லுகின்றது. அவனுக்கு கூடக் கல்விக்கொரு ஆதாரனாகியும், தானே கல்விமானாயுமிருந்தான் இவனுடைய பின்னாயகுணத்தினாலே இடைக்காடனென்கிற ஒரு மகா கல்விமானை அவமானம் பண்ணினான் இடைக்காடன் சுந்தரேசுவரிடத்திலே போய் இதைக்குறித்து முறையிட்டு மதுரையிலிருந்து வைகையாற்றுக்கு வடக்கே போய்விட்டான் அப்போது அவன் பின்னே சுவாமியும் அந்தச் சங்கத்துப் புலவர்களும் போய்விட்டார்கள் இப்படியே இவர்கள் போய்விட்டதினாலே அந்த ராசாவுக்குத் தான் நடந்தது துர்நடத்தையென்று புத்திவந்து வாழ்த்துவணக்கங்களாலே அந்தக் கோபமுள்ள சுவாமியையும் அந்த மனஸ்தாபமுள்ள வித்துவானையுஞ் சாந்தப்படுத்தினான் அதினாலே அந்தச்சுவாமி திரும்பிக் கோவிலிலே போயிருந்தார் அந்தப் புலவர்களுஞ் சங்கத்திலே போயிருந்தார்கள்

குலேசனுக்குப் பின்னே அவன் குமாரனாகிய அரிமர்த்தனன் வந்தான் அவன் மாணிக்கவாசகரென்கிற தன்னுடைய பிரகாசமான மந்திரியினாலே பிரபலமானான் மாணிக்கவாசகர் மறுபடியுஞ் சைவமதத்தை ஸ்தாபிக்கிறதிலேயும் பௌத்தர்களை ஓட்டுகிறதிலேயும் முக்கிய காரணராயிருந்தார் மதுரைபுராணத்தையெழுதுப் பிரதியிலே இந்தராசாவுக்கு இவரையே மந்திரியாகச் சொல்லுகிறது பின்னும் விரிவான பிரதியிலே வமசசேகரனுக்கு மந்திரியாகிய தென்னவன் பிரமாயனும் மாணிக்கவாசகருமாகிய இந்த இருவரையுஞ்சேர்த்து வழக்கப்படிக்கு அற்புதங்களைச் சொல்லியிருக்கின்றது ஆகிலும், மாணிக்கவாசகர் ராசாங்க காரியஸ்தராய் அப்போதிருந்தாரோ என்னவோ, வமசசேகரனுக்கு வெகுகாலம் பின்னாலேயிருந்தாரென்கிறது கொஞ்சஞ் சந்தேகமாயிருக்கத்தக்கது அவரிருந்தது மிகவும் நவீனகாலத்திலே எவ்வளவேனும் இருக்கத்தக்கதோ அது மாத்திரஞ் சங்கையாயிருக்கின்றது சைனர்களுடைய சாதனங்களிலேயும் மற்றவைகளிலேயும் இந்த மாணிக்கவாசகர் கூன்பாண்டியனுடைய ராசரீகத்திலே இருந்தவர்களுக்குப் பூர்வீகராயிருந்தாரென்று காணுகின்றது இந்தச் சாதனங்களிலே ஒன்று கிறிஸ்தாண்டு, சாகாப்தமே அவரிருந்ததாகக் காணுகின்றது மற்றொன்று ஆயிரம் வருஷத்துக்கு மேலே அவருடைய புத்தகம் பண்ணப்பட்டதாகச் சொல்லுகின்றது அவருடைய சரித்திரத்திலே அவர் வாதச்சமஸ்தர்கள் சைனர்களல்ல, பௌத்தர்களேயென்றும், அவர்கள் கூன்பாண்டியன் துரைத்தனத்திலே இருந்த வேதபக்கியாகனென்றும் பிரமாயச் சொல்லுகின்றது. இவைகள் ஒத்திருக்கையிலே கிறிஸ்தாண்டிலே, இம் [illegible]த்துக்கும், அம. சதகத்துக்கும் நடுவே அவரிருந்ததாகப் பாவிக்கின்றது. அவருடைய அற்புதங்கள், ஒரு ஐரோப்பியனால் கல்விமானாலே முன்னமே பூரணமாயுந் திருத்தமாயும் எழுதப்பட்டிருக்கிறபடியினாலே அவைகளைக்குறித்து நாம் விவரிக்கத் தேவையில்லை அவருடைய பிரபந்தங்கள் மிகவுங் கடினமானவைகள் அவைகள் திருவாசகமும் சிற்றம்பலக்கோவையுமாம் சிவபூசையைக் குறித்தஸ்தோத்திரங்களாம் சிதம்பரத்துக் (Chillumbrum) கோவிலிலே அவர் பௌத்தரோடே வாதாடினார் அவருடைய எதிரிகள் (Colombo) கொழும்பிலிருந்துவந்த வாத்திமார்களாய் மேற்சொல்லிய பௌத்தர் சைவசமயாதிகளாய் விட்டார்கள் பிறகு பாதொருமதக்கலகமுங் காணவில்லை

(இன்னும்வரும்)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

௮. அதிகாரம்.

Mohammed gains some followers—Challenged to work a miracle —His Reply—The Koran the grand Miracle of his Religion

(மகமதற்புதப் பிரயலிய வினவல)

மகமதுநபி தன்னுடைய வல்லமையினாலுஞ் சாதுரிய சாமார்த்தியத்தினாலும் (௩) வருடத்துக்குள்ளாக (௩௰) பேரைத் தன்னுடைய மதத்துக்கநுசாரிகளாகச் சேர்த்துக்கொண்டார். அப்படியிருந்தும் அவ்வேளையில் அவருடைய மார்க்கத்துக் கநுசாரிகளாயிராமல் அவரெண்ணத்தைக்கொலைத்துக் கேடுசெய்யவிரும்பு எண்ணங்கொண்டவர்களெல்லாரும் நீரொரு அற்புதஞ் செய்து காட்டினால் அப்பொழுது நாமனைவரும் உம்முடைய மதத்தநுசாரிகளாய் வருவோமென்றார்கள். மேலும் உம்முடைய போதனையின்படி, மோசேயும் யேசுக்கிறிஸ்துவும், மற்றுந்தீர்க்கதரிசிகளுந் தாங்கள் பராபரனாலனுப்பப்பட்டவர்களென்பதைத் திருஷ்டாந்தமாய்க் காபிக்கும்படிக்கு அற்புதங்களைச் செய்தார்கள் அப்படியே நீரொரு உண்மையான தீர்க்கதரிசியென்றும், உமக்கு முன் அனுப்பப்பட்ட அனைவரிலும் நீர் பெரியவரென்பதைக் காட்டும்படிக்கும் அற்புதங்களையுமடையாளங்களையும் எங்களுக்குச் செய்துகாட்டும் உதாரணமாக, மரித்தோரையெழுப்பவும், ஊமைகள் பேசவும், செவிடரைக்கேட்கவும் பண்ணும் அல்லாவிட்டால் நிலம் வெடித்துப் பிளந்து நீரூற்றுகள் [illegible] தெங்கும் பரவிப்பெருகியோடவும் நாம் நிற்கிற இடத்தை முந்திரிகைமரங்களினாலும் பேரீச்சமரங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிங்காரத்தோப்பாக்கி அதற்கு நாற்புறத்திலுந் தண்ணீர் பாயும்படி நாலுவிதமான கால்வாய்களை உண்டுபண்ணும் இல்லாதிருந்தால் முத்துக்களினாலும் நனிதான நகைகளினாலுமியற்றி அழகுபெறச் செய்த ஒரு வீட்டை உமக்குச் செய்துகொள்ளும் இல்லாவிட்டால் வானத்திலிருந்து வந்ததென்கிறதாக நீர் சொல்லுகிற புத்தகத்தையாகுதல் அல்லது அப்புத்தகத்தைக் கொண்டு வந்த தேவதூதனையாகுதல் எங்களுக்குக் காட்டும் அப்படிச் செய்வீரானால் நாங்கள் விசுவாசிப்போமென்றார்கள் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு உபாயமாய் மறுமொழி [illegible] கோரும் புத்தகத்திலே சில [illegible] காரியங்களைச் சொல்லியிருக்கின்றன எப்படியெனில் 'நானே (மகமது) நரகத்தினுபாதியையும் மோட்சத்தின் சந்தோஷத்தையும் பற்றி உங்களுக்குப் பிரசங்கஞ் செய்கிறதற்கேயல்லாமல் அற்புதங்களையும் அதிசயங்களையுஞ்செய்து உங்களை என் வசமாக்கிக்கொள்ளுகிற நோக்கமாய் [illegible] வரவில்லை" அப்பொழுது அவ்விசுவாசிகளனைவரும் "நீர் பராபரனாலனுப்பப்பட்டவரென்பதைத் திருஷ்டாந்தப்படுத்தும்பொருட்டு எங்களுக்கொரு அடையாளத்தைக் காட்டினாலொழிய நாங்கள் உம்மில் விசுவாசம் வைக்கமாட்டோமென்பார்கள்." அதற்குப் பிரதியுத்தரமென்னவெனில், "அடையாளங்களும் அற்புதங்களும் [illegible] தொழிலும் இலட்சணமுமேயல்லாமல் மறுபேருக்களிக்கப்பட்டு [illegible] நானுமோ ஒரு பிரசங்கியிலும் அதிகமானவனல்ல அல்லாமலும் பராபரனுடைய பொக்கிஷம் என் தத்துவத்துக்குக் கீழாகவிருக்குதென்று நான் சொல்லவில்லை பரமரகசியங்களை அறிந்தவனென்றும் நானுங்களுக்குச் சொல்லு

கிறதில்லை மெய்யாகவே நானொரு தேவதூதனென்றுஞ் சொல்லுகிறதில்லை முற்காலத்திலிருந்த சனங்களோ அந்தந்தக் காலத்திற் பிரபலியமாயிருந்த தீர்க்கதரிசிகள் செய்துகாட்டின அற்புதங்களை நம்பாமற் போனதனாலேயே, அதினிமித்தமாகப் பராபரனினிமேல் உலகத்திலே அற்புதஞ்செய்யும்படிக்கு ஒருவருக்கென்கிலும் அற்புதவரத்தைக்கொடுக்கவில்லை இன்னும் ஆண்டவரன்றானே அற்புதமில்லாதபடி விசுவாசியுங்களென்று சொல்லிச் சிலரையழைத்திருக்க அவர்களும் விசுவாசியாமற் போனார்களேயானால், பராபரனாலழைக்கப்படாதவர்களுக்கு முன்னின்று அநேகமாயிரம் அற்புதங்களைச் செய்துகாட்டினாலும் விசுவாசியாமற் போவார்கள் மேலும் நாங்கள் அந்தச் சனங்களிடத்துக்குத் தீர்க்கதரிசிகளை அனுப்பினாலும் மரித்தோரெழும்பி அவர்களுக்கு முன்னின்று பேசினாலும் பராபரன் சித்தமானாலொழிய மற்றும்படி அவர்கள் விசுவாசிக்கமாட்டார்கள் இன்னும் நீரெவ்வளவு அற்புதஞ் செய்தாலுஞ் சனங்களோ விசுவாசிக்கமாட்டார்கள்”

மகமதுநபி மெத்தீனாநகரியிலொரு ராணுவத்துக்குத் தளகர்த்தனாயிருந்தபொழுது அவர் தன்னுடைய சனங்களுக்குப் படிப்பித்துக்கொடுத்தபோதனையென்னவென்றால், முற்காலத்திலே பராபரன் மோசேயென்பவரையும் யேசுக்கிறிஸ்துநாதரையும் உங்களிடத்துக்கனுப்பி அற்புதஞ்செய்கிறவரத்தையும் அவர்களுக்களித்தும், அவர்கள் செய்த அற்புதங்களையும் அதிசயங்களையுஞ் சனங்கள் தங்கள் சொந்தக் கண்ணினாற் கண்டும் அவைகளை நம்பாமற் போனதினாலே இப்பொழுது ஆண்டவனே பட்டயத்தினாலே விசுவாசத்தைப் பலப்படுத்தும்படி ஒரு தீர்க்கதரிசியை உங்களிடத்துக்கனுப்பியிருக்கிறார் அந்தப் பட்டயமோ அப்போஸ்தல ஊழியத்துக்கொரு உண்மையான முத்திரையாயிருக்குதென்று சொன்னார் இதைப்பற்றிக் கிப்பனென்கிற (Gibbon) சரித்திரகாரன் சொல்லுகிறதென்னவெனில், “மகமது ஒருகையிலே பட்டயத்தையும் மறுகையிலே கோருனபுத்தகத்தையும் வைத்துக்கொண்டு தனது மார்க்கத்தைப் பரம்பப்பண்ணிவந்தார்.”

மகமதுநபி செய்தாரென்று சிலர் சொல்லுகிற அற்புதங்களென்னவென்றால், சந்திரனை இரண்டாகப் பிளந்தாரென்றும், மரங்களெல்லாமொருமுறை அவரைச் சந்திக்கப்போனதென்றும், அவருடைய விரலுக்கிடையே தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்ததென்றும் கல்லுகளெல்லாமெழும்பி அவரை மினவினதென்றும், ~~ஒரு [illegible] பார்த்து [illegible]~~தென்றும், ஒரு ஒட்டகம் அவருக்குச் சில காரியத்தைப்பற்றி முறையிட்டதென்றும், ஒரு ஆட்டுக்கண்டயொருமுறை தனக்கும் இன்னுஞ் சிலருக்கும் ஆரோ நஞ்சுபோட்டுவிட்டார்களென்று சொல்லி அறிவித்ததென்றும் இப்படியே அவரைப் பின்பற்றித் திரிந்த சிலர் சொல்லிவந்தார்கள் அப்படியிருந்தும் மகமதுநபியோ தான் இவைகளைச் செய்[தேனெ]ன்று சொல்லவில்லை மகமது மதத்தைப்பற்றிய சரித்திரகாரருஞ் சொல்லவில்லை ஆனாலும் மகமது செய்தாரென்று சனங்கள் சொல்லுகிற அற்புதமென்னவென்றால், கோருனபுத்தகத்தை அவருண்டாக்கினதே அற்புதங்களெல்லாவற்றிலும் பெரியவற்புதமென்றுதான

கூட்டெென்பவர் செய்த பிரபஞ்சநூல்

Abridgement of Good's Book of Nature.

இரண்டாம் பிரிவு—இரண்டாம் அதிகாரம்.

விலங்குசாதியின் விசேடலட்சணம்,—௫௧ம் பக்கத்தினின்று

௰௮. நாம்இப்பொழுது மிருகசாதியின் உயர்ந்தவகுப்பளவும் பார்த்தோம். அம்மமுள்ள மிருகங்களுக்கு மூச்சுக்குடருங், குட்டிகளுக்குப் பாலூட்டுகிற உறுப்பும் விசேஷித்திருக்கின்றன. இவ்வகையிலே மிகுதியானவைக்குக் கால் அல்லது கைபோன்ற நான்கு நடையுறுப்புக்களுமுண்டு, இதுகாரணத்தினாலே நாற்காலிவகையென்று முன்னழைக்கப்பட்டவையை இப்பொழுது லினியஸ் என்பவர் அம்மமுளனவெனப் பெயர்மாற்றியிருக்கிறார்.

௰௯. இந்தவகுப்பிற்கு ஏழினமுண்டு, அவை பற்களின்தொகை, நிலை, அடுக்குக்குத்தக்கதாய்ப் பெயரிடப்பட்டன. முதலாவது, மேன்மிருகம் இவ்வினத்தில் அலகிற்கு நன்நான்கு முன்வாய்ப்பற்களுண்டு மந்திக்குலமும், வௌவாலும், லீமர் என்பவைகளுமாத்திரமே இவ்வினத்திற் சேர்ந்தன. மந்தியும், வௌவாலும் ஓரினமென ஆர் எண்ணியிருக்கக்கூடும்.

௨௰. இரண்டாமினம் கீழ்மிருகம். அதற்கெந்த அலகிலும் முன்வாய்ப்பற்களில்லை. இதில் ஒன்பதுவர்க்கமுண்டு. அவைகளில் காண்டாமிருகம், தேவாங்கு, மிருகமீனாகிய கடற்பன்றி, நூசவுதுவேல்ஸ் என்னுமூரின் தாராசசொண்டனுஞ் சேர்ந்தன.

௨௧. மூன்றாமினம், புன்மிருகம் இதற்கு விசேஷம் முன்வாய்ப்பற்கள் மேலுங் கீழும் இரண்டுதொடுத்துப் பத்துமட்டாகவும் ஒற்றைத் தந்தமுள்ளதாகவும் இருக்கும். இதில் பதினொருவர்க்கமுண்டு நாயும் பூனையுந்தான் ஒருவேளை இவ்வினத்தில் நன்றாய்ச்சேர்ந்தன. அகழான், முட்பன்றி இவ்வினத்திற் சார்ந்தன. இந்தக் கடைசியான மிருகத்தை மூஞ்சூறு, தேரை முதலான சிறுமிருகங்களைப்பிடிக்கத்தக்கதாய்ப் பழக்கலாமென்று சொல்லுவார்கள், என்றாலும் அது வீடுவாசலுக்குச் சிறந்தமிருகமல்ல.

௨௨. நான்காமினம் வளைமிருகம். இதில் அலகுக்கிவ்விரண்டு முன்வாய்ப் பற்கள் ஒன்றோடொன்று நெருங்கியுங் கொடுப்புப்பற்களுக்குத் துலைத்துமிருந்து தந்தமில்லாமலிருப்பது விசேஷம். இவ்வகைமிருகங்களுக்குப்பழைநிலத்திலே இவையிற்சில மாரியளவும் நித்திரைகொள்ளும் இதில் நீர்நாய்,முயல்,வெள்ளைமுயல், எலி, மூஞ்சூறு சேரும், பின்னே சொன்னவை நித்திரைகொள்ளுகிற மிருகங்களிற்சேரா.

௨௩ இனியடுத்தது, கம மிருகம். இது ஐந்தாம் வகை இதற்குப் பெரும்பான்மை மேல்வாய்ப்பல்லின்றிக் கீழ்வாயிற் கொடுப்புப்பற்களுக்குத் துலைத்து ஆறு அல்லதெட்டுமுன்வாய்ப்பற்களுமுண்டு கொம்புள்ளவைக்குத் தந்தமில்லை, தந்தமுள்ளவைகளுக்குக் கொம்புமில்லை. இவையாவுக்கும் நான்கு இரைக்குடல்களுண்டு இவை இரைமீட்டுக் குளம்புள்ளவையாயிருக்கின்றன. குளம்புகள் நடுவே விரிந்திருக்கும். மாடு, ஆடு, மான், ஒட்டை இவ்விபரத்திலடங்கினதாய் வெளியிலறியலாம்.

௨௪. அம்மமுள்ளனவினாறாமினம், போர்மிருகம் இதற்கு மேலுங்கீழும் முன்வாய்ப்பற்களும் குளம்புக் கால்களுமுண்டு. இதில நான்குவர்க்கமாத்திரமுண்டு. குதிரை, கோவேறுகழுதை, கழுதையும், நீர்க்குதிரையும், மரைப்பன்றியும், ஊர்ப்பன்றியும், குதிரைக்கும், பன்றிக்கும் பல்லுங் குளம்புஞ் சரியாயிருந்தாலும் அவைகளின் சுபாபத்தில் ஒன்றுக்கொன்று ஒப்பிக்கக்காணவில்லை.

௨௫. கடைசியினத்தில் திமிங்கிலமடங்கும். அந்த

டாக மோசேயினுடைய ஆகமங்கள் வாசிக்கப்படும்போது மூக்காடு அவர்கள் இருதயத்தின்மேலே கிடக்கிறது இந்த மனக்குருட்டாட்டம் நிலைநிற்கிறதற்கு ஒருமுகாந்திரமென்னவெனில்,மோசேயின், மும ஆகமங்கள் முதலான வேதங்களைக் கவனியாமல்விட்டு முன்னோர்களுடைய பற்பல பாரம்பரை நியாயங்களும் குருக்கள் நியமித்த பிரமாணங்களுமாகிய தல்மட் (Talmud) என்கிற ஆகமங்களுக்குஞ் செவிகொடுத்து நடந்ததுதான்.

உலூத்தர் (Luther)என்பவர் இருந்த நாட்களிலேவேதக்காரர் சத்திய வேதப் புத்தகத்தை மறைத்து அதற்குவதிலாக முற்பிதாக்களுடைய பாரம்பரை நியாயங்கள் பாப்புமாரும் அர்த்தச்சங்கத்தாரும் நியமித்த பிரமாணங்கள் சடங்குகள் முதலானவைகளுக்குச் செவிகொடுத்து வெகு மோசங்களிலே அகப்பட்டதுபோல யூதச் சனங்களுக்குள்ளும் நடந்துவந்தது ஆனாலும் வேதக்காரர் அகப்பட்ட மோசங்கள் நீங்கும்படிக்குஞ் சத்தியவேதமென்கிற வெளிச்சம் பிரகாசிக்கும்படிக்கும் பராபரனுடைய கிருபையினாலே ரோமானவேதக் குருவாகிய உலூத்தர் என்பவர் எழும்பி லத்தின் பாஷையிலே வேதத்தை நன்றாய் ஆராய்ந்து பார்த்த பின், வேதம் வேறே, பாப்புமார்முதலானவர்கள் கொடுக்கிற பிரமாணங்கள் வேறே இவைகள் இதற்கு ஒப்பாயிராதே போனால் தள்ளிப்போடலாமென்று வெகு நியாயங்களைக் காட்டித் தம்முடையதேசத்தார் வேதத்தை அறியும்படிக்கு உதவிசெய்ததுபோல யூதச் சனங்களுக்குள் இந்நாட்களிலே ஒருத்தர் எழும்பி உதவிசெய்துவருவது சொல்லவேண்டிய நற்செய்திதான் அதெப்படியெனில் இங்கிலந்துதேசத்திலிருக்கிற யூதச் சனங்களுக்குள் சிர் ஐசாக் லையன் கோல்ட்சிமித் (Sir Isaac Lion Goldsmid) ஆகிய முதலாளியொருத்தர்மோசேமுதலானவர்கள் எழுதின ஆகமங்களையும் பாரம்பரை நியாயங்கள் முதலானவைகளாகிய தல்மட் ஆகமங்களையுந் தாராளமாய் ஆராய்ந்து ஒத்துப்பார்த்தபின், இவைகளேயல்லாமல் இவைகள் வேத வாக்கியங்களல்லவென்றும் இவைகளை வெறுங் கட்டுக்கதையாகத் தள்ளிப்போடவேண்டுமென்றுந் தீர்ப்புப்பண்ணி இந்தத் தீர்ப்புக்கு ஒம்பட்டவர்கள் அநேகராகிய திருத்தப்பட்ட யூதர்களுக்கு இவர் தலைவராய்வந்து யூதச் சனங்களுக்குள் அகப்பட்ட மோசங்களை நீக்கும்படிக்குப் பழையேற்பாடாகிய தேவ வசனமென்கிற வெளிச்சம் பிரகாசிக்கும்படிக்கு உதவிக்காரராயிருக்கிறார் இந்த ஏவுதலினாலே யூதச்சனங்களுக்குள் மிகுந்த கிலேசமாயிருந்தும் அவர்கள் வேதத்தை அதிக விருப்பத்துடனே ஆராய்ந்துபார்க்கும்படிக்கும் பாக்கியமுள்ள பராபரனுடைய மகிமையான சுவிசேஷமென்கிற வெளிச்சத்திற்சேரும்படிக்கும் ஏவப்படுவார்களென்று நம்பலாம் பின்னும் ஏசேக்கியேலெழுதின தீர்க்கதரிசனம், ௩௭ம் அதிகாரத்திலும் சகரியா எழுதின, ௰௨ம் அதிகாரத்திலும் இப்படிப்பட்ட அதிகாரங்களிலேயும் யூதச் சனங்களைக் குறித்து நிறைவேறுந் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுங்காலஞ் சமீபமாயல்லவோ வருகுதென்று யூதச் சனங்களமாத்திரமல்ல புறதேசத்தார் எல்லாரும் விழிப்பாயிருந்து பார்க்கவேண்டியது, இந்தப் புதுவிதமான (Protestant) மார்க்கம் நடக்கிறது எப்படியென்று கேள்விப்படுவது எவர்களுக்கும் பிரியமாயிருக்கும். இப்படிக்கு

இன்னுஞ்சோபனசெய்திகள் சம்பவிக்குமென்றுகாத்திருக்கிற

ஒருவர்

To the Editors of "Morning Star"

Gentlemen,

Will you please to insert the following Mathematical questions and request your readers for solutions

An Astronomical Question

On what day of the year will the Longitude and Right ascension of the sun be severally equal to the Complement of its declination

Yours, &c

T. Balch.

பரிதிசாயனம்பற்றிப்புலமைதங்
கருதுபாதுக்கிராந்தியின் கோடியை
மருவியொத்துவருவதெந்நாளெனத்
தெரியுமாறுரை செயமின் கணிதரே.

A Geometrical Question

The area of any Right angled Triangle is equal to the product of half its perimeter multiplied in to the same diminished by the hypothenuse, or otherwise, to the product of the differences of the base and perpendicular, severally subtracted from half the perimeter. A Geometrical Demonstration is required.

Yours, &c

P C. Hay

மட்டமுக்கோண்பரப்பறிய வகுத்த திரிபுயத்தரையை வாரிக்கன்னம்-விட்டதினூற் புயத்தரையைக்குணித்தலன்றி வேறுவிதிவிளம்பின்ற -திட்டதிரி புயத்தரையிலடிப் புயத்தோடெழுபுயத்தைத் தெரிவாயத்தள்ளி—விட்டவிருசேடமதைத்தாக்கலாந் திருட்டாந்தமவேண்டும் வேண்டும்.

An Algebraic Question

Given one of the sides of a Trapezium, inscribed on a given circle, and the two lines drawn from the middle of the given side to the opposite angular points, required to determine the Trapezium

Yours, &c

S. Merwin

புரையிலவட்டமதளவறிவதனொடு புகுமோர்திட்டமில்சதுர்புயமதிலொரு-கிரையினுற்றிடுபுயமறிவதனொடுநியமமுற்றதின மதியமதனினூறு—வரையுமற்றிருவரிபவையெதிர்பெற வருபொருத்துற வருமவையறிவொடு —கரைகட்டமிலசதுர்புயமறிவிதி கடுகவெடுத்துரைகளறுக்கணிதரே

(An Inquiry in regard to Dreams)

உதயதாரகையே,

உன்னைநாங்களிதுவரைக்கும் ஆகாயத்தின்கண்ணின்றுஎல்லோருக்கும் இருளை நீக்கி ஒளிகொடுக்கக் கண்டுவருகிறோம். ஆனாலும் இப்போ பூமியிலேயுள்ளனுஞ் சகலருக்கும் அறியாமையென்னும் இருளை நீக்கி அறிவென்னும் ஒளியைக் கொடுக்கின்றாயே, அப்படியிருக்க என் சிற்றறிவுக்குப் புலப்படாத ஓர் காரியத்தை எனக்கு நீ வெளிப்படுத்தக் கேட்கிறேன். அஃதாவது நாங்கள் இரவில் நித்திரைசெய்கிறபோது கனவுகாணுகிறோம் அந்தக் கனவில நாங்கள் இராசாக்கள், சேனை, பாம்பு, எலி, குரங்கு இவைமுதலானவைகளையும் மேலும் உலகத்திலொருபோதுங் கண்டிராத வஸ்துக்களையும், இராசாக்கள் கோபிக்கிறதாகவும், சந்தோஷப்படுகிறதாகவும், ஆக்கினைசெய்கிறதாகவும், சிறைச்சாலையிற் போடுகிறதாகவும், தலையைவெட்டுகிறதாகவும், திரவியங்களை வெகுமதியாகக் கொடுக்கிறதாகவும், பாம்பு, குரங்கு, எலி கடிக்கிறதாகவும், அரசாக்கள் அமர்புரிகிறதாகவும், மற்றுஞ் சகலவித செய்கைகளையும் காணுகிறோமே அதிற் சிலகனவுகளினால் நாங்கள் பாடுபடுகிறதாகவும், கால் முறிந்துபோனதாகவும், கினேகிதன் இறந்துபோனதாகவும், மரணமநேரிடுகிறதாகவும், வறுமைப்படுகிறதாகவும், அல்லது விவாகஞ் செய்கிறதாகவும், சிநேகிதருக்கு விருந்துபண்ணி ஆடல்பாடல் செய்விக்கிறதாகவும், ஐசுவரியமடைகிறதாகவும் இப்படியே சஞ்சலமான காரியங்களையுஞ் சந்தோஷமான காரியங்களையுங் கண்டு அதிகம் பயப்பட்டுத் திகிலடைகிறதும் மிகவுஞ் சந்தோஷித்து மகிழ்ச்சியடைகிறதும் முழிக்கிறபோதைக்கு அதனைதன அற்பசிசி சிறுது நாழிகைமட்டும் நிற்கிறது, இவை இப்படியிருக்கிற தன்மையினாலே இப்படிப்பட்ட கனவுகளை நாங்கள் காணுகிறதற்குக் காரணமென்ன? நீ பலபலபாஷைக்காரருக்கும், மதக்காரருக்குந் தோற்றப்படுகிறபடியால கற்றுவல்லகலைஞராகிய அவரவர்களெண்ணத்திலிதைப் பற்றிக்கிடக்கின்ற நியாயங்களையும் அப்படியே அந்தந்தக்களுக்களிலுற் சம்பவிக்குங் காரியங்களையும் அவர்களொவ்வொருவரிடத்திலும் அறிந்து எனக்கறிவி

திருவண்ணாமலை இப்படிக்கு உன்துதாசன்

துன்மாசஉ.ஆ பங்குனிமீ ௧௰.தி. த அம்பலவாணன்

சிறிதுவேளை நாங்கள் கனாக்காணுகிறதுஞ் சிறிதுவேளைகாணாததுமென்ன? எங்களுயிர் மெய்மெய்யாய் இவைகளைக்கண்டு பரிட்சிக்குதோ? நாங்கள் நித்திரைகொள்ளும்போதும் எங்களுயிர் என்னசெய்கின்றது. நாங்கள் காண்கிறகனாப்படி சிறிதுவேளை சம்பவித்துஞ் சிறிதுவேளைசம்பவியாததுமென்ன?

[Questions on the Roman Catholic Catechism]

கனம்பொருந்திய முகாமைக்காரரே,

உங்கள் பத்திரிகை மாசத்தைப் பற்றிய விசேஷங்களுக்கும் இடங்கொடுப்பதினால் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறது, சிலநாளுக்கு முன் இங்கிலீசிலே திருப்பியிருந்த உரோமான் மார்க்கக் கேள்வி மறுமொழிகளை வாசிக்கையிற் சில வினாவிடை வேதவசனத்திற்கு மாறுபாடாகவும் சிலது ஒன்றுக்கொன்று ஒவ்வாமையாயும் இருப்பதைக் கண்டு அவைகளின் கருத்தை உங்கள் பத்திரிகையிலே தெளியும்படிக்கு விரும்பி அவைகளுக்குட் சிலவற்றை மாத்திரம் இப்பொழுது இதனடியில் எழுதி அனுப்புகிறேன் தயவுசெய்து உங்கள் பிரயோசன பத்திரிகையிற் பிரசுரஞ்செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்

கூஅசுரு ஏராப்பையிலுள்ள உரோமான் சபையாருக்குச் சந்தப்பாப்பின் அனுமதிப்படிக்குப் பிரசித்தஞ்செய்யப்பட்ட கத்தோலிக்கமென்னும் வினாவிடைப் புத்தகத்திற் பரிசுத்த சக்கிரமேந்து என்ற நற்கருணையைப்பற்றி எட்டாம் பாடத்திற் சொல்லியிருக்கிற சில வினாவிடைகளாவன

வினா இயேசுக்கிறிஸ்து பரமண்டலத்தைவிட்டு நற்கருணையில் எழுந்தருளுகிறாரோ?

விடை இல்லை, அவர் மகா மகிமையோடே உலகமுடிவிலே சீவியரையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க வருமளவும் அவர் எப்பொழுதும் தமது பிதாவாகிய பராபரனின் வலதுபாகத்தில் இருக்கிறார்

பின்னை எப்படி அவர் பீடத்தில் எழுந்தருளுகிறார்?

விடை பராபரனுடைய சர்வவல்லமையினாலேதான்

இந்த வினாவிடைகள் கிறிஸ்துநாதருடைய சரீரம் பரமண்டலத்திலே பராபரனுடைய வலப்பக்கத்திலே இருக்கிறதென்றும் அது நியாயத்தீர்ப்புநாள் மட்டும் அங்கே இருக்கிறதென்றும் அந்த நற்கருணையில் எழுந்தருளவில்லையென்றும் அறிவிக்கிறன அப்படியானால் பின்னை எந்தச் சரீரம் பராபரனுடைய சர்வவல்லமையினால் நற்கருணையில் எழுந்தருளுகிறது அவர் எடுத்த மெய்யான சரீரந்தானோ, அல்லது பொய்யான ஓர் சரீரமோ, அவர் எடுத்த மெய்யான சரீரமென்கில் அப்பொழுது மேற்சொன்ன வினாவிடைகளுக்கு விரோதமாய் இருக்கிறது ஏனெனில் அவர் வானத்தைவிட்டு நற்கருணையில் வரவில்லையென்று போதிக்கிறது பின்னையொரு பொய்யான சரீரமென்று சொல்லுகிலும் அதுவும் உரோமான் மார்க்கப் போதகத்திற்குப் பொருந்தாது, ஏனெனில் நற்கருணை கிறிஸ்துவின் மெய்யான சரீரமும் அவருடைய மெய்யான இரத்தமுமாகிறதென்றும் போதிக்கிறார்கள், இந்தப் போதகம் மிகுந்த மலைவை உண்டாக்குகிறது, ஆதலால் இப்போதகத்தைக் கைக்கொள்ளுகிற உரோமான் மார்க்கக் கிறிஸ்தவர்களாவது அவர்கள் குருக்கண்மாராவது தயவுபண்ணி இதைத்தெளிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்

கூஅசுஉ௵ பங்குனிமீ யசு திகதி மட்டக்களப்பு } இப்படிக்கு இயோவான் பிலிப்பு

மிகவும் கனம்பொருந்திய முகாமைக்காரருக்கு வந்தனம்

மாயாதவாகரவாறணமாவலவானவனே
மாயாதவாகரவாறணமாவலவானவனே
மாயாதவாகரவாறணமாவலவானவனே
மாயாதவாகரவாறணமாவலவானவனே

இந்த ஏகபாதசெய்யுளுக்கு என் சிற்றறிவுக்குப் பொருள் விள்ளாமையினால் தங்கள் உதயதாரகைமூலமாய் இதைப் பிரசித்தப்படுத்தி அதின்வழியாய் அதின் பொருளையும் பிரசித்தப்படுத்தக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
பங்குனிமீ. எதி மதுரை. மையிலை ஏகாம்பரம்பிள்ளை

---

௩ அதிகாரம்

நீத்தார் பெருமை—*The Praise of Holy Men.*

உ௰உ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

பு இருவகைப்பற்றையும் விட்ட முனிவருடைய பெருமைக்கு அளவுசொல்ல வந்தால் அளவிடக்கூடாது, ஆதலால் அது எதுபோலுமென்றால் இந்த உலகத்திலே பிறந்து இறந்துபோனவர்களை இம்மாத்திரம் பேரென்று எண்ணி அறிவதை மேற்கொண்டதுபோலும்.

To describe the measure of the greatness of those who have forsaken the two-fold desires, is like counting the dead

Drew

To count the virtues holy men attain
Were as to count the ghosts that from this world
Have taken flight

Ellis

உ௰௩. இருமைவகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

பு. பிறப்பு வீடு என்கின்ற இரண்டினுடைய துன்ப இன்பக்கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து அந்தப் பிறப்பை ஒழிப்பதற்காக இந்தப்பிறப்பிலே அறத்தை மேற்கொண்டவருடைய பெருமையே உலகத்தில் உயர்ந்து விளங்கியது.

The greatness of those who have discovered the properties of both states of being, and clothed themselves in virtue, shines forth in this world (beyond all others)

Drew.

No VIII

By means of the *Nose* human beings

Smell—To perceive by the nose
Snuff—To draw in with the breath through the nose
Sneeze—To meet air through the nose audibly and violently
Sneer—To turn up the nose by way of contempt
Snuffle—To breathe hard through the nose when obstructed
Snore—To breathe with a hoarse, rough noise in sleep
Scent—To trace by the smell
Snort—To force the air with violence through the noise so as to make a noise.

} The *first* of these two words is commonly applied to *Dogs* and the second to *Horses*

EXAMPLES —illustrating the use of the above words

It is pleasant to *smell* a rose
To *snuff* tainted air is disagreeable.
A cold in the head usually causes one to *sneeze*
A foolish boy will *sneer* at the counsel of his teacher
It is not pleasant to hear one *snuffle*
An uneasy *posture in sleep commonly occasions* one to *snore*.
A dog has remarkable power to *scent* its prey
The sound of the cannon made the horse *snort*.